# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1767 - 2012 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2012.07.13

*1767 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 856 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 858 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2012, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆவணி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆனி 20.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பஸ்ஸறை | டேபேட்ட பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் யட்டிகின்த பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், பதுளை |

7-273

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆவணி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, ஆனி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | வெள்ளவத்தை பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கொழும்பு, டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே | கோட்டே வடக்கு பகுதியில் கொழும்பு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கொழும்பு, டாம் வீதி, கொழும்பு 12 |
| கொழும்பு | ஹோமாகம | மத்தேகொட பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் சல்பிற்றி கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கொழும்பு, டாம் வீதி, கொழும்பு 12 |

7-436

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆயுர்வேத வைத்திய சேவையின் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2012

இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்பட உள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. ஆயுர்வேத திணைக்களத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

2. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் (ஆயுர்வேத சேவை யாப்பிற்கமைய) தகுதியானவர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2012.08.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவ உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆயுர்வேத வைத்திய சேவையின் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2012" என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் இல்லை. அதன் பின் தோற்றுவதற்கு ரூபா 200 பெறுமதியான முத்திரையும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு ரூபா 50 பெறுமதியான முத்திரையும் ஒட்டி, அதன்மீது கையொப்பமும் திகதியும் இட்டு அம்முத்திரையை பாவனையற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும், அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு, பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர், "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்னை, மகரகமை" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பம் அஞ்சலிட்ட திகதி, அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் மற்றும் பதிவு இலக்கம்.

5. **பரீட்சைத் திட்டம்**.- இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவை யாப்புக்கு ஏற்றவாறு அனுமதிக்கப்பட்ட பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நடாத்தப்படும்.-

(I) *கணக்கு நடைமுறைகள்.*-: கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்கு நடைமுறைகள் பகுதி I (X அத்தியாயம் தவிர)

(II) *தாபன விதிக்கோவை.*- கீழ்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் வினாத்தாள் -

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, தொகுதி I (volume I) – அத்தியாயங்கள் I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள்; மற்றும்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் தொகுதி II இல் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) *ஆரோக்கியசாலை நிர்வாகம்.*- கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் வினாத்தாள் -

(i) ஆரோக்கியசாலை சம்பந்தமாக நடைமுறையில் உள்ள சாதாரண சட்டதிட்டங்கள் ;
(ii) ஆரோக்கியசாலைச் சுத்தம் ;
(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் ;
(iv) நோயாளிகளுக்கு பொருத்தமான உணவுகளை பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள் ;
(v) மருந்து உற்பத்தி பரிபாலனை ;
(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள சாதாரண சட்டதிட்டங்கள் ;
(vii) வைத்தியசாலை வைத்திய அதிகாரி தொடக்கம் துணை அலுவலர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள விளக்கம் ;
(viii) வைத்தியசாலை தொடர்பான சாதாரண நிர்வாகம் ;
(ix) ஆயுர்வேத திணைக்கள சாதாரண ஒழுங்குவிதிகள் ;
(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான சட்டதிட்டங்கள் ;
(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை.

(IV) *அரசகரும மொழி வாய்மொழிப் பரீட்சை.*- சிங்களம்/தமிழ் (15 நிமிடங்கள்)-

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு -
(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல்
(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்
(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு –
  (அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல்
  (ஆ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்
  (இ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகள் கட்டாயம் பெறவேண்டும்.

பீ. எஸ். கே. ஆர். வீரக்கோன்,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்னை,
மகரகமை.
2012.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத வைத்திய சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2012**

சுட்டெண் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : [ ]
சிங்களம் - S, தமிழ் - T
(பொருத்தமான எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக் களில்): Mr./Mrs/Miss :-----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்/ சிங்களத்தில்) : திரு./திருமதி/செல்வி -----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.

4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : -----.

5. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-----.
அலுவலகம்/திணைக்களம்/ஸ்தானம்

7. கடமைபுரியும் அலுவலகமும் விலாசமும் (தமிழில்/ சிங்களத் தில்) :-----.
அலுவலகம்/திணைக்களம்/ஸ்தானம்

8. தற்போதைய பதவி :-
  (i) பதவி :-----.
  (ii) நியமனக் கடித இலக்கம் :-----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :-

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்பு பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களுக்கோ தோற்றி சித்தியடைந் துள்ளீர்களா ? :-----.
(நிதிப் பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ ஆரோக்கியசாலை நிர்வாகம்/வாய்மொழிப் பரீட்சை) (தமிழ்/சிங்களம்) :-----.
அப்படியாயின், சுட்டெண்ணும் திகதியும்) :-----.

11. தாங்கள் பரீட்சைக்கு தோற்றுவது முதற்தடவையா ? :----.
பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதுவிடின், ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரைக்கூடு:

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக 200 ரூபாபெறுமதியான முத்திரையையும், ஒவ்வொரு பாடத்திற்காயின் 50 ரூபா பெறுமதியான முத்திரையையும் இங்கே ஒட்டவும் |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரை ஒன்றின்மேல் ஒன்று மேவக்கூடாது.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ................. ரூபா பெறுமதியான முத்திரை/முத்திரை கள் செல்லுபடியானவை என்றும் முன்னர் உபயோகிக்கப்படாதவை என்றும் நான் உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப் பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

....................................................,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகார மளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி ................................................................... எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

## அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2011

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான தகவுப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2012, ஒற்றோபர் மாதம் நடாத்தப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனுமோர் நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாவிட்டால் அந்நிலையம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும். பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளுதல் அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இச் சட்டங்களை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

(iv) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது இருந்த விண்ணப்பதாரியின் பதவி, சேவை நிலையம் மற்றும் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பரீட்சை விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் நிகழும் மாற்றங்கள் எவையும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

4. இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் பத்து (10) வருட முனைப்பான சேவைக் காலத்தையும், அத்திகதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் பூர்த்தி செய்துள்ள அலுவலர் ஒருவராதல்.

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- இப்பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி, பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்காக தகைமை அடைந்த திகதியாக கருதப்படும். மேற்படி தகைமைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைகின்ற அலுவலர்கள் வகுப்பு I இற்கு தரமுயர்வு பெற தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

5. **பரீட்சைத்திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்தினாலான ஒரு தகவுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

| | பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | தாபன நடைமுறைகள் | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (ii) | அரசநிதி முகாமை | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| (iii) | விடய ஆய்வு | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | பொது வினாத்தாள் | 1 மணித்தியாலம் | 100 |
| | மொத்தம் | | 400 |

தாபன நடைமுறைகள்.- தாபன விதிக்கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பிரயோக அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் - 25 புள்ளிகள்
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். - 75 புள்ளிகள்

**அரச நிதி முகாமை :**

(அ) நிதி ஒழுங்கு விதி பற்றிய பிரயோக அறிவு
(ஆ) கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு
(இ) அடிப்படை வங்கிகள் தொடர்பான அனுபவம்
(ஈ) களஞ்சியப்படுத்தல் பற்றிய அடிப்படை அறிவு ஆகியன தொடர்பாக பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாவதுடன் இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்-

பகுதி I - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 08 வினாக்கள் - 25 புள்ளிகள்
பகுதி II - பகுதி கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். - 75 புள்ளிகள்

**விடய ஆய்வு**.- அலுவலக நிர்வாகம் பற்றிய ஒரு பிரச்சினைக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராயுமுகமாக வடிவமைக்கப்பட்ட பல் விருப்பு சுருக்க விடைகள் மற்றும் பகுதிக்கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். கற்கைக்காக விடயங்கள் வழங்கப்படுவதுடன் விடையளிக்க வேண்டிய வினாக்கள் பின்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 05 வினாக்கள் - 05 புள்ளிகள்
பகுதி II - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 05 வினாக்கள் - 05 புள்ளிகள்
பகுதி III - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்கள் - 90 புள்ளிகள்

**பொது வினாத்தாள்**.- உள்நாட்டு வெளிநாட்டு, நடப்பு விவகாரங்களில் விண்ணப்பத்தாரரது பொது அறிவை பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இவ்வினாத்தாள் 03 பகுதிகளைக் கொண்டிருக்கும்.-

பகுதி I - பல்விருப்பு வினாக்கள் - 32 வினாக்கள் - 16 புள்ளிகள்
பகுதி II - வழங்கப்படும் 04 தலைப்புக்களில் 02 இற்கு சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும். - 36 புள்ளிகள்
பகுதி III - வழங்கப்படும் கட்டுரை முறையிலான 04 வினாக்களில் 02 இற்கு விடையளித்தல் வேண்டும். - 48 புள்ளிகள்

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் சேவையில் சேர்ந்த மொழியிலோ அல்லது வேறு அரச கரும மொழியொன்றிலோ இவ்வினாப்பத்திரங்களுக்கு பதில் எழுத வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தி அடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு 40 வீத (40%) புள்ளிகளும் 160 அல்லது அதற்கு கூடிய மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. பரீட்சை பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இம் மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் தமது விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2012, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பும்போது திருப்திகரமான சேவை பற்றிய சான்றிதழ் ஒன்றையும் அதில் உள்ளடக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா அம்சங்களிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் தன்னால் சேவைச் சான்றிதழில் கையொப்பம் இடப்பட்டுள்ளதென்பதிலும் திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும். பரீட்சை ஆணையாளரிடம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது

பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவங்கள்.**- இலக்கம் 1.1 இலிருந்து 1.9 வரையுள்ள தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் "ஏ4" அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்யவேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகவுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைக்கக்கூடியதாக இத்தீவிலுள்ள ஏதேனுமொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டிவிடவும். மேலும் அதன் படப்பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதிக்கு முன்னர் அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசியுடன் அச்சிடப்பட்ட அனுமதி அட்டையையும் அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையின்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி, பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11. அரச கரும மொழிக் கொள்கை நோக்கத்தின் பொருட்டு எல்லா விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவற்றை அம்மொழியிலேயே நிரப்ப வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,
2012, யூன் மாதம் 27 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2011**

**Examination for Promotion of Officers in Class II of Public Management Assistants' Service to Class I - 2011**

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது).

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
உதாரணம் :- SUNIL, A. B.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.5 நீங்கள் அரச சேவையில் சேர்ந்த பின் உங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா? :----.
ஆமெனில் முன்னைய பெயரை குறிப்பிடவும் :----.
1.6 சேவை நிலையமும் முகவரியும் :----.
1.6.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)
1.6.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
1.7 பால் :-
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)
1.8 பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
1.9 தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தற்போது வகிக்கும் பதவி :----.
2.1 பதவி :----.
2.2 நியமனக் கடித இலக்கமும் திகதியும் :----.
2.3 குறித்த சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலராக நியமனம் பெற்ற திகதி :----.
ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
2.4 நீங்கள் சேவைக் காலத்திற்குள்ளான எல்லா சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா? :----.
இல்லாவிட்டால் விபரங்களைக் குறிப்பிடவும் :----.
2.5 நீங்கள் எத்தகையதுமான ஒரு தண்டனை/தண்டனைகளைப் பெற்றிருப்பின் அது பற்றி சுருக்கமாக குறிப்பிடவும் :----.
2.6 நீங்கள் தற்போது ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள்: ----.
2.7 நீங்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றுக்காக அல்லது வேறு ஏதேனும் அலுவலுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.

3. 3.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகிறீர்களா? :----.
3.2 பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.
3.3 முத்திரைக்கூடு :----.

நீங்கள் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் ரூபா 400 பெறுமதியான பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டி விடவும்.

4. **விண்ணப்பதாரரின் உறுதிமொழி** :

(1) மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவை எனவும்,
(2) அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர் என்றும் ...... ஆந் திகதி நான் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இற்கு நியமனம் பெற்றேன்என்றும்.
(3) 2012, ஓகத்து 13 ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலம் மற்றும் 05 வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளேன் என்றும்,
(4) நான் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகின்றேன் என்றும்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிமொழிகிறேன்.

இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவருமாயின் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(அடிக்குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- (1) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு முன்னர் வகித்த பொது எழுதுநர் சேவை அல்லது அதனோடிணைந்த சேவைகளின் வகுப்பு II/ II "அ" வின் சேவைக்காலத்தை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் சேவைக் காலத்தை கணிப்பீடு செய்யும் போது உரியதாகக் கொள்ள வேண்டும்.

(2) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**.- எனது அலுவலகத்தின் அலுவலர், திரு./திருமதி/செல்வி ....................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் இதில் கையொப்பம் இட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

-----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்,
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(1) திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் 2012, ஓகத்து மாதம் 13 ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர் என்றும் ................. ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்றும்,
(2) அவரது சுயவிபரக் கோவையின் படி வகுப்பு II இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ................................ (நியமனக் கடிதத்தின் இலக்கத்தை குறிப்பிடவும்) என்றும்
(3) அவர் விண்ணப்பத்தின் 1.0 முதல் 4.0 வரையுள்ள பந்திகளில் தரப்பட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டது என்றும் அவை சரியானவை என்றும்
(4) அவர் முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றுகிறார் என்றும்/உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

(தேவையற்ற சொற்களை கீறிவிடவும்).

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

7-374

திருத்தம்

**சுகாதார அமைச்சு**

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2012

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2012.06.08 ஆந் திகதிய 1762 ஆம் இலக்க வர்த்தமானியில் சுகாதார அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட அறிவித்தலின் திருத்தம் :-

1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 2012.07.27 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2. உரிய வர்த்தமானியில் தொடர் இலக்கமாக குறிப்பிடப்பட்ட பயிலுனர் பயிற்சிநெறி கீழே குறிப்பிட்டுள்ளவாறு மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் சேவை மற்றும் துணை மருத்துவ சேவை என்பவற்றிற்கு உரித்தாகும்.

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் சேவை**

| பயிற்சி நெறி இல. | பயிற்சிநெறியின் பெயர் |
|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் |
| 2 | பௌதீக சிகிச்சையாளர் |
| 3 | தொழில்சார் சிகிச்சையாளர் |
| 4 | X - கதிர் தொழில்நுட்பவியலாளர் |
| 10 | மருந்தாளர் |
| **துணை மருத்துவ சேவை** | |
| 5 | பொது சுகாதாரப் பரிசோதகர் |
| 6 | குடும்பநல உத்தியோகத்தர் |
| 7 | ஈ. சி. ஜி. தொழில்நுட்பவியலாளர் |
| 8 | ஈ. ஈ. ஜி. தொழில்நுட்பவியலாளர் |
| 9 | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் |
| 11 | கண் தொழில்நுட்பவியலாளர் |
| 12 | பல் தொழில்நுட்பவியலாளர் |
| 13 | பூச்சியியல் உதவியாளர் |
| 14 | பாடசாலை பல் சிகிச்சையாளர் |

3. 13 ஆம் பந்தியில் முதல் நியமனத் திகதியில் இருந்து 10 ஆண்டுகள் நியமனம் பெற்ற நிலையத்தில் சேவையாற்றுவது கட்டாயமானதாகும் என்பதற்குப் பதிலாக முதல் நியமனம் பெற்று 10 ஆண்டுகள் செல்லும்வரை முதல் நியமனம்பெற்ற மாகாணத்தில் கடமையாற்றுவது கட்டாயமானதாகும் என சேர்க்கப்படல் வேண்டும்.

*13(1) என கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் :-

இணைத்துக்கொள்ளும் பதவிக்கு III ஆம் தரத்தில் சம்பளத்திட்டம் உரியதாகும். இந்தச் சம்பளத் திட்டம் கீழே குறிக்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு சந்தர்ப்பங்களில் இது மாறுபடும்.

* தொடர் இலக்கம் 1, 2, 3, 4, 10 குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்ப வல்லுனர் சேவை மற்றும் தொடர் இல. 11, 12, 13, 14 துணை மருத்துவ சேவைக்கு தரம் III - ரூபா 15,440 - 5 x 180 - 5 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 28,260.

* தொடர் இலக்கம் 5, 6 குறிப்பிடப்பட்ட துணை மருத்துவ சேவைக்கு தரம் III - ரூபா 15,260 - 6 x 180 - 4 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 28,020.

* தொடர் இலக்கம் 7, 8, 9 குறிப்பிடப்பட்ட துணை மருத்துவ சேவைக்கு தரம் III - ரூபா 15,080 - 7 x 180 - 3 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,780.

இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத சிக்கல்கள் தோன்றின் அது சம்பந்தமாக சுகாதார அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(வைத்தியர்) ரவீந்ர றுபேரு,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2012, யூன்.

7-459

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.